සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education – Western Province

තෙවන වාර ඇගයීම
மூன்றாம் தவணை மதிப்பீடு 2020
Third Term Evaluation

ශ්‍රේණිය / தரம் / Grade 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ்மொழியும் இலக்கியமும் | புள்ளி வழங்கும் திட்டம்

## பகுதி I

| வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 3 | 21 | 4 | 31 | 3 |
| 02 | 2 | 12 | 3 | 22 | 2 | 32 | 2 |
| 03 | 2 | 13 | 4 | 23 | 3 | 33 | 3 |
| 04 | 1 | 14 | 2 | 24 | 1 | 34 | 2 |
| 05 | 3 | 15 | 2 | 25 | - | 35 | 3 |
| 06 | 3 | 16 | 4 | 26 | 4 | 36 | 2 |
| 07 | 2 | 17 | 2 | 27 | 4 | 37 | 2 |
| 08 | 3 | 18 | 3 | 28 | 3 | 38 | 3 |
| 09 | 2 | 19 | 4 | 29 | 1 | 39 | 2 |

**40 X 1 = 40** புள்ளிகள்

## பகுதி II

***வினா இலக்கம் 01***

1) வாவு பரி தேர் ஏறி வா என்று அழைப்பன போல் கூவினவே
   வாவு + பரி + தேர் + ஏறி + வா + என்று + அழைப்பன + போல் கூவின + ஏ

2) (அ) யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு (ஆ) உன்னுடைய

3) “கூறுவதை நன்றாகக் கிரகித்துக் கொள்கிறாயா?” என்று நிலா கூறினாள்.

4) (அ) சிறந்த கவிஞரான பாரதியார் சிறுவர்களுக்கெனப் பல கவிதைகளை இயற்றியுள்ளார்.

6) அரசன் + அல்லன் அரசன் + நல்லன்

7) பெறுநர் பதில் எழுதுவதற்குப் பெறுநர் முகவரி அவசியமானது.

8) ‘கருமை

9) மணப்பெண் அணிவன அணிந்து புனைவன புனைந்து மணவறையில் வீற்றிருந்தாள். (வெறும் பொருத்தமான வாக்கியம்)

10) நாம் பலரும் வெறுக்கத்தக்க பயனற்ற சொற்களை கூறினால் எல்லோரும் நம்மை இகழ்ந்தே பேசுவர்.

**10 X 2 = 20** புள்ளிகள்

**வினா இலக்கம் 02**

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்துவெளிப்பாடும் மொழிச்செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

**(அ) பொருளமைவும் அளவும்**

அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குறிப்புகள் என்பவற்றை அனுசரித்து பொருட்பொருத்தத்துடன் கேட்கப்பட்ட சொல் அளவில் கட்டுக்கோப்பாக எழுதப்படல். கருத்துகளில் தொடர்ச்சி காணப்படல்.

**(ஆ) கருத்துவெளிப்பாடும் மொழிச்செம்மையும்**

கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்தல், பொருத்தமான மொழிப்பிரயோகம், சொல், வாக்கியம், எழுத்து வழுக்களின்மை, தேவைப்படுமிடத்து பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், ஆதாரங்கள் தந்து எழுதுதல்.

**(இ) எழுத்து நுட்பங்கள்**

பந்தியமைப்பு, பந்திகளுக்கிடையே தொடர்புடைமை, குறியீடுகள் இடப்படல், உறுப்பமைவு.

**(ஈ) தலையங்கம்**

பொருத்தம், சுருக்கம், கவர்ச்சி

**வினா இலக்கம் 03**

| | | |
|---|---|---|
| (அ) | விடய உள்ளடக்கம் | - 06 புள்ளிகள் |
| (ஆ) | செல்லளவு | - 02 புள்ளிகள் |
| (இ) | மொழிநடை | - 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **- 10 புள்ளிகள்** |

- 40 - 50 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகிறது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல் அளவுக்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்குக் குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும்போது நிதானாகக் கணக்கிடவும்.

**வினா இலக்கம் 04**

1. கசப்பு
2. அவர்களது இயல்பான கெட்ட குணத்தை மாற்ற முடியாது.
3. போக்குநீக்கு
4. இப்பாடலில் இடம்பெறும் பின்வரும் தொடர்களைப் பிரித்தெழுதுக.
   (அ) கருமை + குமட்டி (ஆ) ஆறு + குணம் -
5. (அ) மாந்தர் (ஆ) புல்லர்

**5 X 2 = 10** புள்ளிகள

**வினா இலக்கம் 05**

| | | |
|---|---|---|
| (அ) | அமைப்பு | - 05 புள்ளிகள் |
| (ஆ) | உள்ளடக்கம் | - 07 புள்ளிகள் |
| (இ) | மொழிநடை | - 03 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

## பகுதி III

**வினா இலக்கம் 01**

(1) (i) நாய் போன்றோரது நட்பு; நன்றிக் குணமுடையவர்களாதலால்

(ii) (அ) புயற்காற்று

(ஆ) அமைதிநிலை

(iii) (அ) சீதக்காதி

(ஆ) வள்ளல் சீதக்காதியின் வள்ளற் தன்மையைப் புகழ்து பாடும் சந்தர்ப்பம்

(iv) (அ) வஞ்சிக்கொடி போன்ற குறத்திப் பெண் குறி சொல்லும் வகையில் பாடப்படும் சிற்றிலக்கியம்

(ஆ) திரிகூட ராசப்ப கவிராயர்

(v) உவமையணி

உவமானம் : சிறகில்லாத அன்னப்பறவை நீந்திக் கரைசேர்தல்.

உவமேயம் : தோணி கரையைச் சென்றடைதல்.

(vi) மரபுத்தொடர்; மிக இறுக்கமான நிலை

(vii) (அ) நன்மையான விடயங்களைக் கைவிட்டுத் தீமையான விடயங்களைக் கைக்கொள்ளுதல்

(ஆ) சான்றோர்களால் விலக்கப்பட்ட தீய செயல்களை விருப்பத்துடன் செய்தல்.

(viii) (அ) சி.வி. வேலுப்பிள்ளை

(ஆ) தமது துனபங்களையெல்லாம் சகித்துக்கொண்டு தாமும் பிறர் நலனுக்காக உழைத்தல்.

(ix) (அ) திருக்குற்றாலநாதர்

(ஆ) உயர்வுநவிற்சியணி

(x) (அ) கொடித்தலை விழுத்தண்டினார்

(ஆ) புறநானூறு

**10 X 2 = 20** புள்ளிகள்

**வினா இலக்கம் 02**

(i) (அ) தலைவியின் கையிலுள்ள வளையல்கள் கழன்றுவிடாது இறுக்கமாகக் காணப்படல்.

(ஆ) தலைவனுடன் மெய்தீண்டி இன்பத்தைப் பெறாதவிடத்தும் அவனது நினைவுகள் மூலம் இன்பத்தைப்பெறும் தலைவிக்கு தச்சனால் செய்யப்பட்ட சிறு குதிரைகள் பூட்டப்பட்ட தேரின் மீது ஏறி அதனைச் செலுத்தி இன்பத்தைப் பெறாதவிடத்தும் கைகளால் அதனை இழுத்து இன்புற்றமை ஒப்பிடப்படுகிறது.

(ii) அ) இராமனைப் பிரிந்த கோசலைக்கு கன்றைப் பிரிந்த பசுவை உமிப்பதன் மூலம். (விளக்கி எழுதப்படலாம்)

ஆ) இராமனின் இனிய நண்பன், இலக்குவனுக்கும் சத்துருக்கனுக்கும் பரதனுக்கும் மூத்தவன்.

(iii) (அ) மழையின்றி விளைச்சல் குறைந்திருந்தமை. பொன்னின் பெறுமதிக்கு நிகராக நெல்லின் பெறுமதி உயர்வடைந்திருந்தமை.

(ஆ) இரப்போரின் இரவுப் பாத்திரம் நீட்டப்பட முன்னரே கொடை வழங்கும் தன்மையுடையவர் என்பதன் மூலம்.

(iv) (அ) புரிந்துகொள்ளச் சிக்கலான நிலை.

(ஆ) கம்பியூட்டரைப்பற்றி முழுமையாக அறிந்திருத்தல். / கணனிக் கல்வியில் பாண்டித்தியம் பெற்றிருத்தல்

**5 X 4 = 20** புள்ளிகள

(3) **'தத்தை விடு தூது'** எனும் பாடற்பகுதியின் துணைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) தலைவன் வாயிலாக வெளிப்படுத்தப்படும் தலைவியின் சிறப்புகள் யாவை?
- மான் ஏங்குகின்ற அழகிய மை தீட்டிய விழிகளையுடையவள்
- வஞ்சிக்கொடி போன்ற மெல்லிய இடையையுடையவள், வளையல்களை அணிந்தவரள்.
- செந்தாமரை போன்ற முகததையும் வாள் போன்ற கூரிய விழிகளையும் உடையவள்.
- இதயமாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள்.
- அன்னத்தைப் போன்ற நடையையுடையவள்.
- மை தீட்டப்பெற்ற கண்களையுடையவள்.
- பவளம் போன்ற வாயினையுடையவள்.

**(எவையேனும் ஐந்திற்கு 05 புள்ளிகள்)**

(ஆ) மேற்படி கவிதைப் பகுதியிற் காணப்படும் அணிச் சிறப்புகளை விளக்குக.
- மானேங்கு மைவிழி - உயர்வுநவிற்சி
- வங்சியிடைப் பைந்தொடி - உவமை
- செங்கமல வாள் விளியாள் - உவமை
- கொங்குமலர் மாலை குரங்கிற்கு அளிப்பாரோ - உவமை
- வெம்புலி வாய் மானென்ன வீணே கொடுத்திடுவார் - உவமை
- கூட்டிற் பசுங்கிளி போல் கோதையர் - உவமை
- இதயத் தாமரைக்கு ஓர் இலக்குமி - உருவகம்

**(எவையேனும் ஐந்திற்கு 05 புள்ளிகள்)**

(இ) பெண் விடுதலைச் சிந்தனைகள் யாவை?
- பெண்ணுக்குச் சுதந்திரம் வேண்டும்
- பெண்கள் கல்வியறிவு பெறல் வேண்டும்.
- பெண்கள் தாம் விரும்பியவரைத் திருமணம் செய்யும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும்.
- பெண்களது திருமணம் என்பது ஆராய்ந்து பார்த்துப் பொருத்தமாக நடைபெறல் வேண்டும்.
- ஆண் என்பதற்காக மட்டும் ஒருவனுக்குப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தல் கூடாது.

**(பாடப்பகுதியிலிருந்து ஆதாரம் காட்டி இது போன்ற எவையேனும் ஐந்திற்கு 05 புள்ளிகள்)**

**அல்லது**

**'பங்கப் பழனத் துழுமுழவர் ...'** என்ற பாடலில்

(அ) சோழநாட்டின் வளம்
- சேறு பொருந்திய வயல்களையுடையது
- வயல்களிளல் சங்குகள் கிடைத்தல் - நீர்வளம்
- உழவர்கள் சங்குகளை எறியக் குரங்குகள் இளநீரைப் பறித்தெறிதல்.

**(03 X 3 = 09 புள்ளிகள்)**

(ஆ) சோழ மன்னனின் வீரம்
- பகை நாட்டவருக்குப் போர்க்களத்திலே சோர்க்கத்தை வழங்கியமை

**(03 புள்ளிகள்)**

(இ) பெண்ணின் பிரிவுத்துயர் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விபரிக்குக.
- வெண்மையான பாலச்சறந்திரனது ஒளி, கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன் காரணமாக பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிதல்

**(03 புள்ளிகள்)**

(4) **'நாவலர் எழுந்தார்'** என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு,

அ) நாவலர் எழுவதற்கு முன்னைய சபையின் நிலை

- வாதப் பிரதிவாதங்கள் உச்சநிலையில் நடைபெறுதல்.
- பிறிற்றோவின் கட்சி முன்னிலை பெற்றிருத்தல்.
- இராமநாதன் கட்சி சோர்ந்து போயிருத்தல்.

**(3 + 2 + 2 = 07 புள்ளிகள்)**

ஆ) நாவலர் எழுந்ததன் பின்னர் சபையின் நிலை

- பிரசண்டமாருதத்துக்குப் பின்னரான அமைதி காணப்படுதல்.
- பிறிற்றோ கட்சியினரை வாதத்துக்கு வருமாறு நாவலர் அழைத்தல்.
- பிறிற்றோ தக்கவர் அல்லவென பிறிற்றோவின் கட்சியினரே கூறுதல்.
- சேர். பொன். இராமநாதன் சட்டசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படல்.

**(4 X 2 = 07 புள்ளிகள்)**

**'அற்றைத் திங்கள்'** என்ற நாடகத்தில்,

அ) போரின் வலி

- போரினால் சொந்த உறவுகளை .ழத்தல்.
- சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் பாதிப்புக்குள்ளாதல்.
- நமக்குச் சொந்தமான உடைமைகளை இழத்தல்.
- சொந்த நாட்டின் வளம், இனிமை என்பவற்றை இழத்தல்.

**(நான்கு கருத்துகளுக்கு 04 புள்ளிகள் பாடத்திலிருந்து ஆதாரம் காட்டி எழுதுதல் 05 புள்ளிகள்)**

ஆ) கபிலர் - பாரி நட்பு

- பாரியின் பறம்புமலை மீது கபிலர் பற்றுக்கொண்டிருத்தல்.
- பறம்பு மலையைப் பிரிகின்ற போதிலும் பாரியின் எண்ண அலைகளால் ஈர்க்கப்படுதல்.
- பாரியின் புதல்விகளைத் தனது பாதுகாப்பில் அழைத்துச் செல்லல்.

**(இவை போன்ற 03 கருத்துகளுக்கு 3 X 2 = 06 புள்ளிகள்)**

(5) **'கம்பியூட்டர்'** என்ற சிறுகதையில்,

அ) கம்பியூட்டரின் வருகையால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள்.

- கதாசிரியரின் மனைவி வீட்டுக் கணக்கையும் சீட்டுக் கணக்கையும் பதிந்து வைத்திருத்தல்.
- மகன் படம் வரைதல், கேம்ஸ் விளையாடுதல்.
- புதிதாய்ப்பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவது போல கணனி மாற்றத்தை ஏற்படுத்தியது.
- கம்பியூட்டர் மொழியில் பேசப் பழகியமை.
- அரவிந்தனுடைய நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருதல்.
- கதாசிரியரின் மனதில் நீண்ட நாளாக இருந்த கதையைக் கம்பியூட்டரில் டைப் செய்தல்.

**(இவை போன்ற 5 கருத்துகளுக்கு 05 புள்ளிகள்)**

ஆ) கதாசிரியர் கைக்கொண்ட உத்திகள்

- தானே பிரதான கதாபாத்திரமாக இருந்து கதையைக் கூறிச் செல்லுதல் (narrator)
- நகைச்சுவை உணர்வுமிக்கதாகக் கதையினைக் கூறுதல்.
- தனது அனுபவங்களைப் பொருத்தமான இடங்களில் இணைத்துக்கொண்டமை.
- உவமையணிகள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
- ஆங்கில, தெலுங்கு, வடமொழிச் சொற்களின் பயன்பாடு.

**(இவை போன்ற 5 கருத்துகளுக்கு 05 புள்ளிகள்)**

(6) **‘குற்றாலக்குறவஞ்சி’** என்ற செய்யுட்பகுதியில்,

அ) குற்றால நாட்டின் சிறப்புக்கள்

- எருமைகளின் பாலை அருந்தும் வாளை மீன்கள் மேலே சென்று பலாக்கனிகளைத் தாக்குகின்றன. (நீர்வளம்)
- வாழை மரத்தின் இலைகள் மீது தாழை மரம் பூக்களைச் சொரிதல் வீடுகளுக்கு வரும் விருந்தினருக்கு சோறிடுவது போன்று காணப்படுகிறது. (நீர்வளம்)
- மாதம் தோறும் மூன்று மழை பொழியும் நாடு (நீர்வளம்)
- வருடம் தேர்றும் மூன்று போகங்கள் விளைச்சல் தரும் நாடு.
- வேதங்களே பலா மரத்தின் வேர், பயன் என விளங்கும் நாடு.

**(இவை போன்ற 5 கருத்துகளுக்கு 05 புள்ளிகள்)**

ஆ) குற்றாலநாதரின் சிறப்புக்கள்

- வளைந்த இளம்பிறைச் சந்திரனைத் தலையிலே அணிந்திருப்பவர்.
- குறும்பலாவின் அடியில் வீற்றிருப்பவர்.
- வளம் பொருந்திய குற்றால நாட்டுக்குரியவர்.
- அரி, அயன், அரன் என மூன்று உருவாகவும் விளங்குபவர்.

**(மூன்று கருத்துகளுக்கு 03 புள்ளிகள் பாடத்திலிருந்து ஆதாரம் காட்டி எழுதுதல் 02 புள்ளிகள்)**

(7) ‘திருக்குறள் - பேதைமை’

அ) பேதையரின் செயல்கள்

- நாண வேண்டியவற்றுக்கு நாணாமை
- நாட வேண்டியவற்றை நாடாமை
- எவரிடத்தும் அன்பு செய்யாமை
- யாதொன்றினையும் பேணிப்பாதுகாத்துக்கொள்ளாமை.
- ஏழு பிறவிகளிலும் தான் பேதைமைக்குள் கிடந்து வருந்தும் துன்பத்தை இந்த ஒரு பிறவியிலேயே செய்துகொள்ள வல்லவன்.
- செய்யும் முறையினை அறியாத பேதை ஒரு செயலை மேற்கொள்ளுவானாயின் அச்செயல் கெட்டுவிடுவது மட்டுமல்லாது தானும் துன்பத்தில் சிக்கி வருந்துவான்.

**(எவையேனும் 6 கருத்துகளுக்கு 06 புள்ளிகள்)**

ஆ) பேதையரின் கைப்பட்ட செல்வத்தின் தன்மை

- பேதையானவன் பெருஞ்செல்வம் பெற்றால் தன்னோடு தொடர்பில்லாதவர்கள் நன்மை பெற சுற்றத்தவர்கள் பசியால் வாடுவர்.
- பேதை தன் கையில் ஒரு பொருளைத் தனக்கு உடைமையாகப் பெற்றால் அது பித்துப் பிடித்த ஒருவன் மதுவுண்டு மயங்கியதை ஒக்கும்.

**(2 X 2 = 04 புள்ளிகள்)**